DAILY THANTHI DATED 12.05.2025

### கலை, அறிவியல் கல்லூரிகளுக்கான

# பல்கலைக்கழக செமஸ்டர் தேர்வு அட்டவணை வெளியீடு

## வருகிற 22-ந் தேதி தொடங்குகிறது

புதுச்சேரி, மே.12-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கீழ் இணைப்பு கல்லூரியாக இயங்கி வரும் கலை, அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கான செமஸ்டர் தேர்வு கால அட்டவணை வெளியிடப்பட்டு உள்ளது. அதன்படி, கலை, அறிவியல் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கான செமஸ்டர் மற்றும் அரியர் தேர்வுகள் வருகிற 22-ந்தேதி தொடங்கி அடுத்த மாதம் (ஜூன்) 23-ந்தேதி வரை நடக்கிறது. இதற்கான ஹால்டிக்கெட்டுகளை வருகிற 19-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை ஆன்லைனில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

வருகிற 22-ந்தேதி முதல் ஜூன் 2-ந்தேதி வரை 6-வது செமஸ்டர் தேர்வு முற்பகலிலும், 5-வது செமஸ்டர் தேர்வு பிற்பகலிலும் நடக்கிறது. ஜூன் 3-ந்தேதி முதல் 12-ந்தேதி வரை 4-வது செமஸ்டர் தேர்வு முற்பகலிலும், 3-வது செமஸ்டர் தேர்வு பிற்பகலிலும், ஜூன் 13-ந்தேதி முதல் 23-ந்தேதி வரை 2-வது செமஸ்டர் தேர்வு முற்பகலிலும், முதல் செமஸ்டர் தேர்வு பிற்பகலிலும் நடக்கிறது.

இந்த தகவலை புதுவை பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

**NEWS PAPER CLIPPINGS**

DINAKARAN DATED 12.05.2025

### கலை, அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான

# பல்கலைக்கழக தேர்வு அட்டவணை வெளியீடு

**புதுச்சேரி, மே 12:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கீழ் இணைப்பு கல்லூரியாக இயங்கி வரும் கலை, அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான தற்காலிக பல்கலைக்கழக தேர்வு கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, கலை, அறிவியல் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் கடந்த ஏப்.28ம் தேதி முதல் மே 5ம் தேதி வரை பதிவு செய்துள்ள நிலையில் வருகிற 19ம் தேதி முதல் 21ம் தேதி வரை ஹால்-டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும், பல்கலைக்கழக செமஸ்டர் தேர்வுகள் வருகிற 22ம் தேதி தொடங்கி ஜூன் 23ம் தேதி வரை நடைபெறும் என புதுச்சேரி பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இதில் 6ம் பருவ செமஸ்டருக்கான தேர்வு மே 22ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை முற்பகலிலும், 5ம் பருவ செமஸ்டருக்கான தேர்வு பிற்பகலிலும் நடக்கிறது. 4ம் பருவ செமஸ்டர் தேர்வு ஜூன் 3ம் தேதி முதல் 12ம் தேதி வரை முற்பகலிலும், 3ம் பருவ தேர்வு பிற்பகலிலும் நடக்கிறது. 2ம் பருவ செமஸ்டர் தேர்வு ஜூன் 13ம் தேதி முதல் 23ம் தேதி வரை முற்பகலிலும், முதல் பருவ செமஸ்டர் தேர்வு பிற்பகலிலும் நடக்கிறது.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

### THE HINDU TAMIL DATED 12.05.2025

புதுச்சேரி மாநில கலை, அறிவியல் கல்லூரிகளுக்கு

## செமஸ்டர் தேர்வு அட்டவணை வெளியீடு

**புதுச்சேரி**

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் கீழ் இணைப்பு கல்லூரிகளாக இயங்கி வரும் கலை, அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கான பல்கலைக் கழக தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கலை, அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தேர்வுக்காக கடந்த ஏப்.28-ம் தேதி முதல் மே 5-ம் தேதி வரை பதிவு செய்துள்ளனர். இவர்கள் வரும் 19-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை ஹால்டிக்கெட்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து வரும் 22-ம் தேதி தொடங்கி ஜூன் 23-ம் தேதி வரை பல்கலைக்கழக செமஸ்டர் தேர்வு நடைபெறுகிறது.

இதில் 6-ம் பருவ தேர்வு மே 22-ம் தேதி முதல் ஜூன் 2-ம் தேதி வரை முற்பகலிலும், 5-ம் பருவ தேர்வு பிற்பகலிலும் நடக்கிறது.

4-ம் பருவ தேர்வு ஜூன் 3-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை முற்பகலிலும், 3-ம் பருவ தேர்வு பிற்பகலிலும் நடக்கிறது. 2-ம் பருவ தேர்வு ஜூன் 13-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை முற்பகலிலும், முதல் பருவ தேர்வு பிற்பகலிலும் நடைபெறும் என புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### THAMIZH MURASU DATED 12.05.2025

## புதுவை சமுதாய கல்லூரி மாணவர்கள் தூய்மை பணி

புதுச்சேரி, ஏப். 12–

புதுச்சேரி லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள், புதிய கல்வி கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடத் திட்டத்தின் கீழ் “சமுதாய ஈடுபாடு” திட்டத்தின் ஒரு பகுதியாக, நேற்று உழவர்கரை நகராட்சியுடன் இணைந்து ஹெலிபேட் மைதானத்தை சுத்தம் செய்தனர்.



லாஸ்பேட்டை சமுதாயக் கல்லூரி மாணவர்கள், புதுச்சேரி நகராட்சியுடன் இணைந்து ஹெலிபேட் மைதானத்தில் தூய்மை பணியில் ஈடுபட்டனர்.

இதில் உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ் ராஜ், சுகாதார அதிகாரி டாக்டர் ராஜா, உதவி பொறியாளர் ஜெயசங்கர் ஆகியோர் பணியைத் தொடங்கி வைத்தனர். மாணவர்கள் மைதானத்தைச் சுற்றியுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர். சுத்தப்படுத்தல் பணிகளுடன், மக்களுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வையும் மாணவர்கள் ஏற்படுத்தினர். இதில் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன், பேராசிரியர்களான சுஜரிதா, இந்துமதி, வசந்தா கோகிலம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இப்பணியில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சுமார் 50க்கும் மேற்பட்ட கலந்து கொண்டனர்.